
(தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் ஓய்வுநாட் பாடசாலையின் பொதுவான புதிய பாடதிட்டத்திற்கான பாட தாள்கள்)

# தரம் 8



தயாரிப்பு: இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்வி மன்றம்

கொழும்பு மறைமாவட்டம்



தரம் 8 - 1ஆம் பாடம்

# நான் கடவுளை நோக்கி பார்க்கிறேன்.

## திருமறைப் பகுதி: திருப்பாடல்கள் 63:1-8

மனன வசனம்: **“என் வாழ்க்கை முழுவதும் இவ்வண்ணமே உம்மைப் போற்றுவேன் கைகூப்பி உமது பெயரை ஏத்துவேன்”**

திருப்பாடல்கள் 63:4

**அறிமுகம்:** தாவீது ராஜா அப்சலோம் ராஜாவிடமிருந்து தப்பிசெல்லும் போது யூத வானாந்தரத்திலிருந்து பாடிய திருப்பாடல். தாவீது ராஜா வாழ்வில் பலவிதமான அனுபவங்களின் போது கடவுளுக்கு துதி பாடல் பாடிய போதும், துன்ப காலங்களிலும் அவ்வாறு செய்தார்.

1. கடவுளில் நீங்கள் நம்பிக்கைகொள்ளும் விடயங்கள் சிலவற்றை குறிப்பிடுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

2. நீர் கடவுளை சந்ததிக்கும் வழிமுறைகள் சிலவற்றை எழுதுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

3. நீர் பெற்ற வெற்றியொன்றை குறித்து கடவுளுக்கு நன்றி செலுத்தி சில வரிகளை எழுதவும்.

..........................................................................................................................................

..........................................................................................................................................

**பயன்படுத்தல்**

1. கடவுள் அனைத்து சந்தர்ப்பத்திலும் துதி கன மகிமைக்கு பாத்திரர்.
2. எமது வாழ்வின் எல்லா சந்தர்ப்பங்களிலும் கடவுளுக்கு துதி செலுத்துவது முக்கியமானதாகும்.
3. தற்போதைய கொரோனா வைரஸ் காரணமாக குழப்பத்துக்குள்ளாகி இருக்கும் நேரத்தில் கடவுள் உமக்கு கொடுத்த அரவணைப்பு பற்றி நினைவுகூர்ந்து நன்றி கூறுக.

**கொழும்பு மறைமாவட்ட, இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்விமன்றத்தால் தயாரிக்கப்பட்டது**



**தரம் 8 - 2ஆம் பாடம்**

# இறைவாக்கினர்

**(பழையேற்பாட்டு இறைவாக்கினர் சேவையை அடையாளம்காணல்)**

**இறைவாக்கினர் சிலரின் பெயர் மற்றும் திருமறைப் பகுதி கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. எலியா - 1 அரசர்கள் 17:1, எலிசா – 1 அரசர்கள் 19:19-21, எசாயா – எசாயா 1:1; 6:1-13, எரேமியா – எரேமியா 1:4-10, எசேக்கியல் 2:1-5**

**மனன வசனம்: 1 "அவர் மூலம் கடவுள் கூறியது 'இறுதி நாள்களில் நான் மாந்தர் யாவர் மேலும் என் ஆவியை பொழிந்தருள்வேன். உங்கள் புதல்வரும் புதல்வியரும் இறைவாக்கு உரைப்பர். உங்கள் இளைஞர்கள் காட்சிகளையும் உங்கள் முதியோர் கனவுகளையும் காண்பர்." (திருத்தூதர் பணிகள் 2:17)**

## அறிமுகம்;

இறைவாக்கினர் என்போர் கடவுளின் முன்னோடி அல்லது பேச்சாளர். அவர் கடவுளின் பெயரால் பிரகடனங்களை முன்வைக்கின்றார். திருமறையில் இறைவாக்கினரின் விசித்திரமான பண்பு என்னவென்றால், அவர்கள் கடவுளின் அனுக்கிரகத்தை பெற்றுள்ளனர். இறைவாக்கினர் தெய்வீகத்தால் அழைக்கப்படுகிறார், கட்டளையிடப்படுகிறார், கட்டாயப்படுத்தப்படுகிறார். கடவுளுடைய செய்தியினை அவ்விதமாகவே மக்களுக்கு உரைப்பது இறைவாக்கினரின் கடமையாகும்.

பிரதானமான இறைவாக்கினர் நால்வர்: எசாயா, எரேமியா, எசேக்கியல், தானியேல்.

சாதாரண இறைவாக்கினர் 12 பேர்கள்: ஓசேயா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீக்கா, நாகூம், அபக்கூக்கு, செப்பனியா, ஆகாய், சேக்கரியா மற்றும் மலாக்கி.

கடவுளுடைய நியாயப்பிரமாணத்தைப் பெற்ற மோசே ஒரு இறைவாக்கினராகக் கருதப்பட்டார், அவ்வப்போது இறைவாக்கு கேட்கப்பட்டது. சாமுவேல் ஒரு இறைவாக்கினர், இஸ்ரயேல் மக்களுக்கு கடவுளின் குரலைக் கொண்டு வந்ததோடு, சவுலையும் தாவீதையும் சாலொமோனையும் அரசனாக்க அவர் செயற்பட்டார். எலியாவும் எலிசாவும் முக்கியமான இறைவாக்கினர்கள் என்று குறிப்பிடப்படுகிறார்கள்.

இஸ்ரயேல் ராஜ்யத்தின் உள்ளார்ந்த விதி, இஸ்ரயேலின் மெசியா இறைவாக்கு மற்றும் உலகைக் காப்பாற்றும் மீட்பர், அவருடைய ராஜ்யம் பூமியில் எவ்வாறு நிறைவேறும் என்பதை தீர்க்கதரிசிகள் குறிப்பிடுகிறார்கள்.

❖ **அறிமுக பகுதியை வாசித்து கீழ்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. இறைவாக்கினர் என்பவர்
   ……………………………………………………………………………………
2. இறைவாக்கினரின் கடமையாவது
   ……………………………………………………………………………………..
3. பிரதான இறைவாக்கினர் இருவர் மற்றும் சாதாரண இறைவாக்கினர் இருவரின் பெயர்களை எழுதுக.
   …………………………………………………………………...…………………
4. நீர் மிகவும் விரும்பும் இறைவாக்கினர் யார்?
   ……………………………………..……………………………………………
5. இவ. இறைவாக்கினரை விரும்புவதற்கான காரணம் என்ன?
   ……………………………………………………………………………………

❖ தற்போது எம்மைச் சுற்றி அனேகமான அநீதிகள் மற்றும் அசாதாரணங்களை காண முடியும். நீங்கள் அநீதிகள் மற்றும் அசாதாரணங்களை காணும் இடங்கள் எவை? இறை வார்த்தையை சமூகத்திற்கு அறிவிப்பதற்கு உமக்கு அழைப்பு கிடைக்கும் சந்தர்ப்பத்தில் உமது பதில் என்னவாக இருக்கும்.



**தரம் 8 - 3ஆம் பாடம்**

# எலியாவுக்கு நம்பிக்கையாக இருந்த கடவுள்

**திருமறைப் பகுதி: 1 அரசர்கள் 18:21–45 (இத் திருமறைப் பகுதியை வாசிக்கவும்)**

மனன வசனம்: **“நெஞ்சே! ஆண்டவருக்காகக் காத்திரு மன உறுதிகொள் உன் உள்ளம் வலிமை பெறட்டும் ஆண்டவருக்காகக் காத்திரு”.**

திருப்பாடல்கள் 27:14

**அறிமுகம்:** எலியா கடவுளின் அழைப்பைப் பெற்ற ஒரு இறைவாக்கினர். கி.மு. 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்ததோடு “தேவனே கடவுளாவார்” என்பதே அவரது பெயரின் ஆர்த்தமாகும். ஆகாப் அரசன் பாகாலை வணங்குகின்ற ஈசபேல்லை அரசியாக்கிகொண்டதனால் இஸ்ரயேல் மக்கள் பாகாலை ஆராதிக்க பழகியிருந்த சந்தர்ப்பத்தில், இக் காலப்பகுதியில் கடவுளின் வார்த்தையை ஆகாப் அரசனுக்கு கொண்டுசெல்வதற்காக எலியா அழைக்கப்பட்டார். இதனாலேயே ஆகாப் அரசன் எலியாவோடு கோபமான இருந்தான்.

(திருமறையை வாசித்து கதையை கற்றுக்கொள்ளவும்).

1. ஆண்டவர் சர்வவல்லமையுள்ள ஒரே கடவுள் என்பதனை நீர் விசுவாசிக்கின்றீரா?

2. நாம் வாழும் சமூகத்தில் தெய்வத்திற்கு நிகரான பல வியங்கள் உள்ளன. அவற்றுள் சிலவற்றை பெயரிடுக.

3. உங்கள் நம்பிக்கையை ஒரே கடவுள் மீது வைத்து தற்போது முகம்கொடுக்கும் கோவிட் வைரசை வெற்றிகொள்வதற்கு நீர் செயற்படும் போது நீர் எதிர்கொள்ளும் தடை என்ன??

- ஒரே கடவுளை மாத்திரம் நம்புவதற்கு பெலனை கேட்டு ஒரு ஜெபத்தை எழுதுங்கள்.

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

**கொழும்பு மறைமாவட்ட, இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்விமன்றத்தால் தயாரிக்கப்பட்டது**

**தரம் 8 - 4ஆம் பாடம்**



# எலியாவை பலப்படுத்திய தேவன்

## திருமறைப் பகுதி: 1 அரசர்கள் 19:1–18

மனன வசனம்:

**எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைகொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு.**

பிலிப்பியர் 4:13



### அறிமுகம்:

பலவீனத்திலும் கடவுள் நமக்கு அதிகாரம் அளிக்கிறார் என்று நம்புவதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. கடவுள் மீது எலியாவின் நம்பிக்கை பாகாலின் தீர்க்கதரிசிகளை தோற்கடிக்க போதுமானதாக இருந்தது. ஆயினும்கூட, அவர் ஈசபேல் அரசி மற்றும் ஆகாப் அரசனின் மிரட்டலுக்கு முன்னிலையில் பெயர்செபாவுக்கு தப்பியோடினார். திருமறையை வாசித்து, இந்த பயணத்தில் கடவுள் எலியாவுக்கு எவ்வாறு உதவினார் மற்றும் ஓரேபு மலைக்கு நாற்பது நாட்கள் பயணம் செய்தார் என்பதைப் பாருங்கள்.

1. உங்கள் வாழ்விலோ அல்லது உங்கள் குடும்பத்திலோ ஒரு கடினமான நேரத்தில் கடவுள் உங்களுக்கு எவ்வாறு உதவினார் என்பதைப் பற்றி எழுதுங்கள்.

2. நீர் கடினம் என நினைக்கும் விடயங்கள் என்ன?

3. நம்முடைய நம்பிக்கை அசைக்கப்படும் போது கடவுள் நம்முடன் இருக்கிறார். நம்மை அவர் கைவிடமாட்டார். இந்த சொற்றொடரை ஒரு நண்பர் அல்லது நண்பிக்கு எவ்வாறு விளக்குவீர்?

தயாரிப்பு: இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்வி மன்றம் கொழும்பு மறைமாவட்டம்



**தரம் 8 - 5ஆம் பாடம்**

# இறைவாக்கினர் எலிசா செய்த சில அற்புதங்கள்

## திருமறைப் பகுதி: 2 அரசர்கள் 4ஆம் அதிகாரம்

**மனன வசனம்: "என்னிடம் மன்றாடு உனக்கு நான் செவிசாய்ப்பேன் நீ அறிந்திராத மாபெரும் செயல்களையும் மறைபொருள்களையும் உனக்கு நான் விளக்கிக் கூறுவேன்".**

**எரேமியா 33:3**

**அறிமுகம்:**

2 அரசர்கள் 4ஆம் அதிகாரத்தை முழுமையாக வாசிப்பதன் மூலம் எலிசா செய்த அற்புதங்கள் சிலவற்றை வாசிக்கக்கூடியதாக இருப்பதோடு அதன் மூலம் கடவுளின் மகத்தான பலத்தை உங்களால் அறிந்துகொள்ள முடியும். எலிசா, இறைவாக்கினர் எலியாவின் சீஷன். எலியாவை விட இரு மடங்கு ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளும்படி அவரை ஆசீர்வதிக்கும்படி கேட்டுக்கொண்ட இறைவாக்கினர் எலிசாவின் வேண்டுகோளை இறைவாக்கினர் எலியா நிறைவேற்றினார். இத் திருமறைப் பகுதியை வாசிப்பதன் மூலம் கீழே குறிப்பிட்டுள்ள அற்புதங்கள் குறித்து அறிந்துகொள்ள முடியும்.

1. விதவையின் எண்ணெய்க் கலசம்.
2. சூனேம் ஸ்திரியின் பரிசு
3. மரித்த பிள்ளைக்கு உயிரூட்டல்.
4. இறைவாக்கினர் குழுவினரை மரணத்திலிருந்து விடுவித்தல்.
5. உணவு தொடர்பான தீர்வு.

## <u>பின்வரும் கேள்விகளுக்கு பதில் அளிக்கவும்</u>

1. விதவைப் பெண்ணிடம் என்ன இருப்பதாக இறைவாக்கினர் எலிசாவிடம் கூறினாள்?

   …………………………………………………………………………………………….

2. அவளை என்ன செய்யுமாறு எலிசா கேட்டுகொண்டார்?

   …………………………………………………………………………………………….

3. விதவைப் பெண் எவ்வாறு கடனை அடைத்தாள்?

   ……………………………………………………………………………………………..

4. எலிசா, ஆண்டவரிடம் கேட்டு சூனேம் ஸ்திரிக்கு கொடுத்த பரிசு என்ன?

   ……………………………………………………………………………………………..

5. சூனேம் ஸ்திரியின் மகனுக்கு செய்த அற்புதம் என்ன?

……………………………………………………………………………………..

6. உணவில் விஷம் இருந்தபோது இறைவாக்கினர் என்ன செய்தார்?

…………………………………………………………………………………….

7. 100 மனிதருக்கு முன் கொண்டுவரப்பட்ட 20 வாற்கோதுமை அப்பங்கள் மற்றும் சில முற்றிய தானியக் கதிர்களுக்கும் இறைவாக்கினர் என்ன செய்தார்?

…………………………………………………………………………………………

## வாழ்வுக்கு ஏதோவொன்று

1. உங்கள் வாழ்வில் அனைத்தும் கடவுளின் கண்களுக்கு தெரியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

2. உங்கள் வாழ்வில் நீங்கள் அனுபவித்த அற்புதமொன்றை தியானிக்கவும்.

3. அவ் அனுபவத்தை சுருக்கமாக விபரிக்கவும்.



### தரம் 8 – 6ஆம் பாடம்

# இஸ்ரயேல் இராச்சியம் பிளவுபடல்.

**திருமறைப் பகுதி: 1 அரசர்கள் 12:1–17**

மனன வசனம்:

**"பிள்ளாய்! விவேகத்தையும் முன்மதியையும் பற்றிக்கொள் இவற்றை எப்போதும் உன் கண்முன் நிறுத்தி வை.”**

நீதிமொழிகள் 3:21


**வரைப்படம்**




**அறிமுகம்:** தேவன் ஆபிரகாமின் சந்ததியினரைத் தம்மால் தெரிந்துகொண்ட சந்ததியினர் என்று பெயரிட்டு, அவர்களை எகிப்திலிருந்து விடுவித்து கானான் தேசத்துக்குக் கொண்டு வந்து, அவர்களை மூன்று ராஜாக்களின் கீழ் கொண்டுவந்தார். ஆனால் சாலமோன் ராஜாவுக்குப் பிறகு, இந்த ராஜ்யம் ஒன்றாக அல்லாது இரண்டு தனித்தனி ராஜ்யங்களாகப் பிளவுபட்டது. சாலமோனுக்குப் பிறகு ரெகபெயாம் அரசனானான். சமூகத்தின் மூப்பர்கள் ரெகபெயாம் அரசன் நல்லாட்சிக்கு உட்பட அறிவுரை வழங்கியபோதும் அக் குரலுக்கு கீழ்ப்படியாமல் தனது வயது இளைஞர்களின் குரலுக்குக் கீழ்ப்படிந்து அநீதியான அரசாட்சியை கொண்டுசென்றமை இராச்சியம் வீழ்ச்சியடைய மூலகாரணமானது. இது மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏமாற்றத்தை அளித்தது.

வடக்கு இராச்சியத்தின் தலைநகரம் சமாரியா, தெற்கு இராச்சியத்தின் தலைநகரம் எருசலேமாகும். இஸ்ரேலின் 12 கோத்திரங்களில் 10 வடக்கு ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள். யூதா மற்றும் பென்யமின் என்ற இரண்டு கோத்திரங்களும் தென் இராச்சியத்தை சேர்ந்தவர்கள். ஆனால் ஆண்டவர் தாவீதுக்கு அளித்த வாக்குறுதி தென் ராஜ்யத்தில் அவருடைய வம்சம் தொடரும் என்றதனடிப்படையில் தொடர்ந்தது.

## 1 அரசர்கள் 12:1–17 திருமறைப் பகுதியை வாசித்து புதிரை நிரப்புக




**மேலிருந்து கீழ்**

5. யூதா மற்றும் பென்யமின் கோத்திரம் எந்த இராச்சியத்தை சேர்ந்தது?
6. இஸ்ரயேல் இராச்சியம் இரண்டாக பிளவுபட அரசன் ............... உபதேசத்தை கேட்டமை.
7. தென் இராச்சியத்தின் தலைநகர் எது?
8. 12 கோத்திரங்களில் 10 இவ் இராசுசியத்திற்கு சொந்தமானது.

**இடமிருந்து வலம்**

1. யாருடைய வம்சாவலியை ஆண்டவர் தாம் தெரிந்துகொண்ட சந்ததியினர் என கூறினார்?
2. வட இராசுசீயத்தின் தலைநகர் எது?
3. ரெகபெயாம் அரசனுக்கு சரியான வழியை காட்ட முயற்சித்த கூட்டத்தார் யார்?
4. சாலமோன் அரசனின் தந்தை யார்?

**வாழ்விற்கு சில**

1. ஒரு தலைவராக தீர்மானம் எடுக்கும்போது ஆண்டவரிடம் ஜெபியுங்கள், அவருடைய குரலைக் கேளுங்கள்.

2. சேவை செய்யும் போது பணியாளர் ஆவியுடன் சேவை செய்தல்.

3. தீர்மானம் எடுக்கும்போது ஆண்டவருடைய வார்த்தையின்படி தீர்மானம் எடுத்தல்.

4. பிறரிடமிருந்து ஆலோசனையைப் பெறும்போது சரியான தீர்மானங்களை எடுக்க சரியான நபர்களுடன் கலந்தாலோசித்தல்.

**கொழும்பு மறைமாவட்ட, இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்வி மன்றத்தால் தயாரிக்கப்பட்டது**



தரம் 8 – 7ஆம் பாடம்

# ஆண்டவரின் அழைப்புக்கு கீழ்ப்படியும் அவசியத்தை விளங்கிக் கொள்ளல்

**திருமறைப் பகுதி: எசாயா 6:1–6**

**மனன வசனம்:** "நம்பிக்கையினாலன்றி எவரும் கடவுளுக்கு உகந்தவராயிருக்க இயலாது. ஏனெனில், கடவுளை அணுகிச் செல்வோர் அவர் இருக்கிறார் என்பதையும் அவரைத் தேடிச் செல்வோருக்குத் தக்க கைம்மாறு அளிக்கிறார் என்பதையும் நம்பவேண்டும்." **எபிரேயர் 11:6**

**அறிமுகம்:** ஆண்டவர் தம்முடைய சேவைக்காக இறைவாக்கினர்களைத் தெரிந்தெடுப்பதற்காக பல்வேறு முறைகளைப் பயன்படுத்தினார். அவர் எசாயாவுக்கு தரிசனத்தின் மூலம் உரையாற்றினார். எசாயா தேவனுடைய மகிமையைக் கண்டார், அப்போது தனது உபயோகமற்ற தன்மையை உணர்ந்தார். ஆண்டவரை முக்முகமாக கண்டவர் உயிரோடிருப்பதில்லை என்ற இஸ்ரயேலின் நம்பிக்கையின்படி எசாயா உண்மையிலே பயமடைந்தார். அவர் தனது சொந்த குறைபாடுகளையும், அசுத்தமான உதடுகளையும் ஒப்புக்கொண்டார்.
சேராபீன்கள் என்போர் ஆண்டவரின் சந்நிதானத்திலிருக்கும் தேவதூதர்கள் என திருமறை குறிப்பிடுகின்றது. சேராபீன்களுள் ஒருவர் எசாயாவிடம் வந்து நெருப்புபொறிகை கொண்டு அவரது வாயை தொட்டு அவரது உதட்டை தூய்மைப்படுத்தி அவரது பாவத்திற்கு மன்னிப்புளித்தார். ஆண்டவர் எசாயாவை அழைத்தபோது, அவர் விருப்பத்துடன் கீழ்ப்படிந்தார்.

1. ஆண்டவர் உம்மோடு கதைக்கும் பல்வேறுபட்ட முறைகள் என்ன?
   ……………………………………………………………………………………
   ……………………………………………………………………………………
   ……………………………………………………………………………………

2. ஆண்டவரின் விருப்பத்திற்கு கீழ்ப்படிவதற்கு உமக்கு தடையாக இருக்கும் காரியங்கள் எவை?
   ……………………………………………………………………………………
   ……………………………………………………………………………………
   ……………………………………………………………………………………

3. உமது பாவத்தை பற்றி உமக்கு தெரியுமா? அப் பாவத்திற்கு மன்னிப்பு கோரி ஜெபிக்கவும்.
   ……………………………………………………………………………………
   ……………………………………………………………………………………
   ……………………………………………………………………………………





**தரம் 8 – 8ஆம் பாடம்**

# இறைவாக்கினர் எரேமியாவின் சேவை

**திருமறைப் பகுதி: எரேமியா 1:1–19, 38:1–13**

மனன வசனம்:

ஆனால், நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர் அவரது உரிமைச் சொத்தான மக்கள். எனவே உங்களை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மைமிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி. 1 பேதுரு 2:9

**அறிமுகம்:** உம்மிடம் களிமண் அல்லது கிளே (Clay) இருப்பின் அதைக்கொண்டு சிறியதொரு படைப்பை உருவாக்கவும். இல்லையெனில் சிறிதளவு மாவை தண்ணீரிலிட்டு சிறியதோர் உருண்டையொன்றை செய்து அதில் படைப்பை உருவாக்க முடியும். அதை செய்யும்போது கீழ்காணும் வழிமுறைகளை பின்பற்றவும்.

1. நீர் செய்யபோகும் உருவம் என்னவென தீர்மானிக்கவும்.
2. மெதுவாக களிமண்ணை, கிளே (Clay) அல்லது மாவினை கையிலெடுத்து உமது படைப்பினை உருவாக்க ஆரம்பிக்கவும்.
3. எத்தனை தடவை நீர் அதை மீண்டும் மீண்டும் உருட்டி படைப்பை உருவாக்க முயற்சித்தீர் என்பதனை நினைத்துப் பார்க்கவும்.

**ஆண்டவர் எரேமியாவைத் தேர்ந்தெடுக்கும்போது, அவர் கூறியதாவது: "தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன் நீ பிறக்குமுன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன் மக்களினங்களுக்கு இறைவாக்கினனாக உன்னை ஏற்படுத்தினேன்." ஆனால் எரேமியா "என் தலைவராகிய ஆண்டவரே, எனக்குப் பேசத் தெரியாதே, சிறுபிள்ளைதானே" என்று கூறி, ஆண்டவரின் அழைப்பை மீற முயற்சித்தார். ஆனால் "அஞ்சாதே. ஏனெனில், உன்னை விடுவிக்க நான் உன்னோடு இருக்கின்றேன்," என்று ஆண்டவர் கூறியமையால் எரேமியா கடைசியில் ஆண்டவரின் குரலுக்குக் கீழ்ப்படிந்தார்.**

**கடவுளுடைய வார்த்தையை அறிவித்தமைக்காக எரேமியா ராஜ்யத்தின் தலைவர்களின் கோபத்திற்காளானார். ஆனால் ஆண்டவர் அவரோடு இருந்தமையால் அவர் தைரியமாக தனது பணியில் ஈடுபட்டார்,**

**(எரேமியா 38:1–13 வரை வாசிக்கவும்)**

**வாழ்விற்கு சில**

1. அனைவரும் தாயின் கருவில் உருவாவதற்கு முன்னரே தெரிந்துகொள்ளப்படுகின்றனர். அதேபோல உம்மையும் ஆண்டவர் தெரிந்துகொண்டிருப்பதை நீர் மறக்க வேண்டாம்.

2. எமது வாழ்வினை ஆண்டவரின் கரத்தில் அர்ப்பணிப்பதாக கூறி ஜெபிக்கவும்.

3. திருப்பணிக்கு செல்வதற்கு ஏற்கனவே உங்கள் மனதில் விருப்பமிருப்பின் காலதாமதமின்றி அதனை உங்களது பெற்றோருக்கு தெரிவித்து உங்கள் போதகருக்கு தெரியப்படுத்துங்கள்.

4. உமது மனதில் எரிகின்ற ஆத்மீக தீயானது அனையாதிருக்க ஜெபியுங்கள்.

தரம் 8 – 9ஆம் பாடம்



# உடைந்த நம்பிக்கையை ஆண்டவர் மீண்டும் உயிர்பெறச் செய்கின்றார்.


**திருமறைப் பகுதி: எசேக்கியல் 37:1–14**

மனன வசனம்:: **அதுமட்டும் அல்ல, துன்பங்களைத் தாங்கிக் கொள்வதிலும் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். ஏனெனில், துன்பத்தால் மன உறுதியும், மன உறுதியால் தகைமையும், தகைமையால் எதிர்நோக்கும் விளையும் என அறிந்திருக்கிறோம்.** உரோமையர் 5:3–4

**அறிமுகம்:** எதிர்பார்ப்பற்று வாழ்ந்த மக்களுக்கு தேவ செய்தியை கொண்டுசெல்வதற்காக இறைவாக்கினர் எசேக்கியல் தேவாவியானவரால் நிரம்பி சென்றார். ஆண்டவர் இறைவாக்கினர் எசேக்கியலை எலும்புகூடுகளினால் நிரம்பிய பள்ளத்தாக்குக்கு அழைத்துச் சென்று எலும்புகளை நோக்கி இறைவாக்கு சொல்லும்படி கட்டளையிட்டார். எலும்புகளுகு நரம்பினை கொடுத்து, மாம்சத்தை உருவாக்கி, தோலினால் மூடி, வாழ்வதற்கு சுவாசிக்கவும் எசேக்கியலுக்குக் கட்டளையிடப்பட்டது. அவர் அவ்வாறு செய்து ஜீவ சுவாசத்தை இறைவாக்குரைத்ததும் எழும்புகூடுகள் திரளான ஜனங்களாக எழுந்துநின்றன.

- **ஆண்டவர் உங்களுக்கு கொடுத்த வெற்றி ஒன்றிற்காக துதிசெலுத்தி சில வரிகளில் கவிதை ஒன்றை எழுதுக.**

……………………………………………………………………………………



……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

**வாழ்விற்கு சில**

1. எதிர்பார்ப்பு இல்லாத இடத்தில் எதிர்பார்ப்பை கொண்டுவர ஆண்டவரால் முடியும்.
2. அதற்காக ஆண்டவர் மனிதரை அழைக்கின்றார்.
3. உமது வாழ்வில் எதிர்பார்ப்பை இழந்த சந்தர்ப்பம் என்ன?
4. அதற்கான தீர்வை தேடி நீர் யாரிடம் செல்வீர்?
5. வாழ்வில் எதிர்பார்ப்பற்றிருக்கும் ஒருவரை நீர் சந்தித்தால் அவருக்கு எவ்வாறு நீர் உதவுவீர்?



## தரம் 8 – 10ஆம் பாடம்

# சூழலை அலங்கரிப்பதற்காக நேரத்தை செலவிடல்

### திருமறைப் பகுதி: தொடக்கநூல் 1:28

**அறிமுகம்:** பலவிதமான பணிகளுக்காக ஆண்டவர் நம்மை அழைக்கிறார் என்பதை கடந்த பாடங்களில் கற்றுக்கொண்டோம். முதலாவதாக அவர் படைத்த உலகைக் காப்பாற்ற மனிதனை அழைக்கிறார். அதை பராமரித்து வளர்ப்பது நமது பொறுப்பு. குறிப்பாக, நாம் வீட்டில் அதிகநேரம் செலவிடும் இக் காலப்பகுதியில் ஆண்டவரின் அழைப்பிற்குக் கீழ்ப்படிவதற்கான வாய்ப்பைப் பயன்படுத்தி, பின்வரும் ஏதாவதொரு செயற்பாட்டில் ஈடுபடுவோம்.

**அறிவு புத்தகத்திற்கு:**

- உலக சூழல் தினம் (**WED**) ஒவ்வொரு வருடமும் ஜுன் 5ஆம் திகதி நினைவுகூறப்படுவதோடு, அது எமது சூழலை பாதுகாக்க ஊககுவிப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் முதன்மைச் செயற்பாடாகும். 1974ல் முதல் முறையான நடைப்பெற்றது.

- இதிலே சூழல் சிக்கல்களான,
  கடல் மாசடைதல், சனத்தொகை மற்றும் புவி வெப்பமடைதல் ஆகியவை நிலையான நுகர்வு மற்றும் வனவிலங்கு குற்றங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு முக்கிய பிரச்சாரமாகும்.

- உலக சூழல் தினமானது வருடாந்தம் 143க்கு மேற்பட்ட நாடுகளின் பங்கேற்புடன் நடைப்பெறுகின்றது.

## செயற்பாடுகள்

1. உமது வீட்டுத் தோட்டத்தை துப்பரவு செய்ய நேரத்தை செலவிடவும்.

2. உமது வீட்டுத் தோட்டத்தில் இருக்கும் இடத்திற்கு அமைவாக செடிகள் சிலவற்றை நடுவதற்கு ஏற்றவகையில் ஏற்பாடுகளை செய்யவும்.

3. பிலாஸ்டிக், பொலிதீன போன்றவற்றின் பாவனையைதுவீபக்குவழ்

4. பிள்ஸ்டிக், பொலிதீன் என்பவற்றினு் பாவனையை குறைத்து வாழ்க்கை முறையை மாற்றி வாழ பழக்கிக்கொள்வோம்.

5. உமது இல்லத்தை தூய்மைப்படுத்தி அதனை ஒழுங்காக வைத்திருக்கவும்.

6. உங்கள் வீடு எவ்வளவு பெரியதாக இருந்தாலும் சிறியதாக இருந்தாலும் சரி, எமது சொந்த உடைகள் வைக்கும் அலமாரி, புத்தக ராக்கை அல்லது மேசை ஆகியவற்றை தூய்மையாக வைத்திருக்க பழகவேண்டியது கட்டாயமாகும். இன்று காலை நீங்கள் சில துப்புரவு செயல்முறைகளில் ஈடுபடுவது முக்கியமாகும் என்பதை உணர்ந்து சில வேலைகளைச் செய்யுங்கள்.



**எமக்கு வழங்கப்பட்டிருக்கும் அழகான உலகிற்காக நன்றி கூறி ஜெபம் ஒன்றை எழுதுக.**

தரம் 8 - பாடம் 11

# எழுபத்திரண்டு சீடர்களை பணிக்கு அனுப்புதல்.



திருமறைப் பகுதி - பரி.Âக்கா 10:1-12

**மனன வசனம் :-** **“அறுவடை மிகுதிÉ வேலையாள்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்.”**

**பரி. Âக்கா 10:2**

- இயேசு, எழுபத்திரண்டு பேரை எவ்வாறு அனுப்பினார் ?

  ……………………………………………………………………………………………

- “அறுவடை மிகுதிÉ வேலையாள்களோ குறைவு.” என்று இயேசு எதனை பொருள் படுத்தினார் ?

  ……………………………………………………………………………………………

- எதனை கூறுவதற்காக எழுபத்திரண்டு பேரையும் அனுப்பினார் ?

  ……………………………………………………………………………………………

- இயேசு எழுபத்திரண்டு பேருக்கும் வழங்கிய அறிவுரைகள் என்ன ?

  ……………………………………………………………………………………………

  ……………………………………………………………………………………………

  ……………………………………………………………………………………………

- கிறிஸ்தவ பணி குறித்து உங்களின் கருத்தை தெளிவுப்படுத்தவும்.

  ……………………………………………………………………………………………

- கடவுளுக்கு பணிபுரியும் படியாக, மிக கடினமான பிரதேசமொன்றிற்கு நீங்கள் செல்லவேண்டும் என நினைத்துக்கொள்ளுங்கள். அங்கு கொண்டுச்செல்வதற்கு உங்களுக்கு தேவைப்படுபவை என்ன ?

**சிந்தனைத் துளி :-**

எதிர்காலத்தில், நீங்கள் இயேசுவின் பணிக்காக செல்வதற்கு தயாராகவுள்ளீர்களா ?

❖ **கடவுளுக்கு பணி புரிவதற்கும் அவரைக் குறித்து பிறருக்கு சாட்சி பகரவும் பெலத்தை தரும்படியாக வேண்டுதல் செய்து ஜெபிக்கவும்.**

தரம் 8 - பாடம் 12



# நீங்கள் கிறிஸ்துவே (மெசியாவே).

## திருமறைப் பகுதி - பரி.மத்தேயு 16:13-20

**மனன வசனம் :-** **சீமோன் பேதுரு மறுமொழியாக, “நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்” என்று உரைத்தார்.**

பரி. மத்தேயு 16:16

- மக்கள் இயேசுவை எந்த நபர்களுடைய பெயர்களைக் கொண்டு இனங்கண்டுக்கொண்டார்கள் ? அவற்றை குறிப்பிடவும்.

  ……………………………………………………………………………………………

- **சரியான பதிலை தெரிவு செய்து தொடர்புப்படுத்துக.**

| | |
|---|---|
| ✓ மக்கள் இயேசுவை இவ்வாறு சொன்னார்கள் | யோனா |
| ✓ இயேசு பேதுருவுக்கு இவ்வாறு கூறினார் | சீமோன் பேதுருவுக்கு |
| ✓ பாதாளத்தின் வாயில்கள் வெற்றி கொள்ளாதது | நீர் மெசியா |
| ✓ பேதுருவினுடைய தந்தையின் பெயர் | நீர் எனது கற்பாரை |
| ✓ பேதுருவினால் இயேசுவுக்கு கூறினது | கிறிஸ்துவின் திருச்சபை |
| ✓ இயேசு விண்ணரசின் திறவுகொல்களை கையளித்தது | இறைவாக்கினர் |

**<u>சிந்தனைத் துளி :-</u>**

மெய்யாகவே நீங்கள் இயேசுவை இனங்கண்டுக்கொண்டீர்களா ?

அப்படியாயின் அவரை பிறருக்கு அறிமுகப்படுத்துவதற்கு ஆயத்தமாகவுள்ளீர்ளா ?

- இயேசு வழங்கும் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதற்கு நீங்கள் ஆயத்தமாகவுள்ளீர்களா ?

- உங்கள் வீட்டிலே, தேவாலயத்திலே, ஓய்வுநாட் பாடசாலையிலே பாடசாலையிலே உங்களுக்கு வழங்கப்படும் பொறுப்புகளை நீங்கள் எவ்வாறு நிறைவேற்றுவீர்கள் ? உதாரணங்களுடன் தெளிவுப்படுத்தவும்.

❖ **இயேசுவை சரியாக இனங்காணுவதற்கும், அவருக்காக பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதற்கும் பயிற்சியளிக்குமாறு வேண்டுதல் செய்து ஜெபிக்கவும்.**

ஆக்கம் :- இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்வி மன்றம், கொழும்பு மறைமாவட்டம்.



## தரம் 8 - பாடம் 13

# தீய ஆவி பிடித்திருந்த சிறுவன் நலமாதல்

**திருமறைப் பகுதி - பரி.மாற்கு 9:14-29**

**மனன வசனம் :-** நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதிÉ கண்ணுக்குப் புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை. **எபிரேயர் 11:1**

- இயேசு, சிறுவனின் தந்தைக்கு நம்பிக்கையைக் குறித்து எதனைக் கூறினார் ?

  ……………………………………………………………………………………………

- இத் திருமறை கதைக்கு அமைய நம்பிக்கையைக் குறித்து நீங்கள் கற்றுக்கொண்டதை எழுதவும்.

  ……………………………………………………………………………………………

- நம்பிக்கை ஊடாக நீங்கள் பெற்றுக்கொண்ட அனுபவமொன்றை எழுதவும்.

  ……………………………………………………………………………………………

- இயேசு தமது சீடர்களுக்கு கூறியபடி, சாத்தான் என்ற பிசாசை முறியடிப்பதற்கு சிறந்த வழிமுறை என்ன ?

  ……………………………………………………………………………………………

**<u>இப்பாடலை பாடவும்.</u>**

**“தேவனை விசுவாசித்தால்**
**இப்போதே அற்புதங்கள் நடக்கும்**
**உன் விசுவாசித்தால் ”**



**ஜெபிப்பதற்கு, பிரச்சினை வரும்வரை காத்திருக்காதீர்கள். தினந்தோறும் ஜெபியுங்கள். அவர் எப்போதும் உங்களுக்கு உகந்ததை பெற்றுத்தருகிறாரேயன்றி உங்களுக்கு தேவையானவற்றை அல்ல என்பதை நினைவிற்கொள்ளுங்கள்.**

கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை. அவர் பெற்றுத்தந்த அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் நன்றி செலுத்தி அவர் மீது மென்மேலும் நம்பிக்கையுடன் இருப்பதற்கு பெலன் தரும்படியாக வேண்டுதல் செய்து ஜெபிக்கவும்.

ஆக்கம் :- இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்வி மன்றம், கொழும்பு மறைமாவட்டம்.



**தரம் 8 - பாடம் 14**





# வயலில் தோன்றிய களைகள் உவமை

**திருமறைப் பகுதி - பரி.மத்தேயு 13:24-30, 36-40**

**மனன வசனம்** :- "வளமுடன் இருக்கும் பாவிகளைப் போல நீயும் இருக்க வேண்டுமென்று ஏங்காதேÉ ஆண்டவரிடம் எப்போதும் அச்சம் உள்ளவனாயிரு. அப்பொழுது உன் வருங்காலம் வளமானதாயிருக்கும்É உன் நம்பிக்கையும் வீண்போகாது."


**நீதிமொழிகள் 23:17-18**

கோதுமை பயிரிட்ட ஒரு விவசாயினுடைய கதையொன்றை இயேசு கூறினார். இரவிலே பகைவன் வந்து விவசாயினுடைய பயிர்களை நாசம் செய்யும் என்னத்தில் கோதுமைகளுக்கிடையே களைகளை விதைத்தான். விவசாயினுடைய பணியாளர்களுக்கு களைகளை பறித்தெடுப்பதற்கு தேவையிருந்தாலும், அறுவடை வரை இரண்டையும் வளர விடுங்கள் என்று விவசாயி கூறினார்.



- கோதுமைகளுக்கிடையே களைகளையும் வளருவதற்கு ஏன் இடமளித்தார் ? தெளிவுப்படுத்தவும்.
- விண்ணரசு எதற்கு ஒப்பாயிருக்கிறது ?
- வட்டத்தினுள் உள்ள சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.


1. விவசாயி என்பவர் .............................
2. நல்ல விதைகளை விதைப்பவர்.............................
3. நல்ல விதைகள் என்பது ..........…......................
4. களைகள் என்பது ...............................…
5. தீயவற்றை விதைத்த பகைவன் ........................
6. அறுவடை நடைப்பெறும் காலம் .............................
7. அறுவடை செய்வோர் ...............................…




ஆக்கம் :- இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்வி மன்றம், கொழும்பு மறைமாவட்டம்.

- உங்களிடம் விதைப்பதற்கிருக்கும் நன்மை எனும் கோதுமைகளை வயலில் விதைக்கவும். (படத்திலுள்ள குழிகளின் மீது எழுதவும்.)
- உங்களிடம் இருக்கும் தீயவற்றை வெட்டி கட்டுகளாகக் கட்டி தீயில் இடவும்.





நன்மை மற்றும் தீமையை வேறுபடுத்தி இனங்காணவும், நன்மையை அனைவரிடமும் விதைக்கவும், தீயவற்றை நமது வாழ்விலிருந்து அகற்றி விடவும் பெலனளிக்குமாறு வேண்டுதல் செய்து கடவுளைத் தொழுவோம்.



தரம் 8 - பாடம் 15

# கடுகு விதை மற்றும் புளிப்பு மாவு



**திருமறைப் பகுதி :- பரி. மத்தேயு 13:31-33**

**மனன வசனம்** :- "நம் ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் அருளிலும் அறிவிலும் வளர்ச்சி அடையுங்கள்."


**2 பேதுரு 3:18**

- நீங்கள் கடுகு விதையை கண்டுள்ளீர்களா ? அச் சிறு விதை பெரிய மரமாகுதல், அல்லது கைபிடி புளிப்பு மாவினால் மூன்று மரக்கால் மாவு முழுவதும் புளிப்பேறியதன் பொருள் என்ன ?
- விண்ணரசுக்காக உங்களால் செய்யக்கூடிய ஒரு மிகச்சிறிய விடயத்தை எழுதவும்.
- நீங்கள் செய்யும் சிறிய விடயங்கள் யாவும் முக்கியமற்றது எனும் உங்களுடைய மனப்பான்மையை நீங்கள் எவ்வாறு மாற்றிக்கொள்வீர்கள் ?
- **நீங்கள் சிறு வயது முதல் எந்தவகையான மரமாகுவதற்கு வளருகிறீர்கள் ? தெளிவுப்படுத்தவும்.**




**விண்ணரசின் வளர்ச்சிக்கான பங்களிப்பை வழங்குவதற்காக திறனை அளிக்குபடி வேண்டுதல் செய்து ஜெபிக்கவும்.**

ஆக்கம் :- இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்வி மன்றம், கொழும்பு மறைமாவட்டம்.



## தரம் 8 - பாடம் 16

# செல்வரான இளைஞர்

**திருமறைப் பகுதி – பரி. மாற்கு 10:17-31**

**மனன வசனம் :** எவரும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது. ஏனெனில், ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அவர் அன்பு கொள்வார்; அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார். நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்ய முடியாது.

**பரி. மத்தேயு 6:24**

- "நான் நல்லவன் என ஏன் சொல்கிறீர் ? " என்று இயேசு செல்வரான இளைஞரிடம் கேட்டார். இந்த கேள்வியை அவர் உங்களிடம் கேட்டால் அதற்கு உங்களுடைய பதில் என்னவாக இருக்கும் ?

……………………………………………………………………………………………

- செல்வர்கள் இறையாட்சிக்கு உட்படுவது கடினம் என்பதை தெளிவுப்படுத்துவதற்காக இயேசு பயன்படுத்திய உவமை என்ன ?



……………………………………………………………………………………………

- ஏராளமான சொத்து இருந்தும் செல்வரான இளைஞருக்கு நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்வதற்கான தேவை இருந்தும் அவருக்கு இருந்த தடை என்ன ?

……………………………………………………………………………………………

- கடவுள் உங்களுக்கு ஏதாவதொன்றை கைவிடுமாறு கூறினால், நீங்கள் அதனை கைவிட தயாராகவுள்ளீர்களா ?

……………………………………………………………………………………………

- **அடைப்புக்குள் இருக்கும் சரியான பதிலை தேர்ந்தெடுத்து இடைவெளி நிரப்புக.**

இயேசுவிடம் இளைஞர் ஒருவர் ………(ஓடி.˙.நடந்து) வந்தார். நிலை வாழ்வை உரிமையாக்கிக் கொள்வதற்கு நான் என்ன ………………….. (சொல்லவேண்டும் ˙.˙செய்யவேண்டும்) என இயேசுவிடம் கேட்டார். அதற்கு இயேசு அவரிடம் ………………(மனிதன் ˙.˙கடவுள்) நன்மையென்று கூறியவற்றை செய்யும்படியாக கூறினார். இளைஞரும் இப்போதும் நான் அவற்றை …………….……….. (செய்கின்றேன்.˙.பார்க்கின்றேன்) என்றான். ஆனாலும் இன்னும் உனக்கு

…………………….….. (ஒரு குறைபாடு.'.இரு குறைபாடுகள்) உள்ளது என இயேசு, அவருக்கு கூறினார். அது என்னவென்றால், அவர் அனைத்தையும் ………… (விற்று.'.வாங்கி) விடவேண்டும் என்பதே. அத்தோடு இளைஞர் அவரின் உடைமைகளை ……………… (செல்வருக்கு.'.ஏழைகளுக்கு) கொடுக்கவேண்டும் என்பதே. அதனைக் கேட்ட இளைஞர் ……………….. (வருத்தப்.'.சந்தோ'ப்) பட்டார். இறுதியில் இளைஞர் இயேசுவை ……………………. (கைவிடுவதை.'.பின்பற்றுவதை) தேர்ந்தெடுத்தார்.

❖ **நீங்கள் எவ்வாறு கடவுளுக்கு ஜெபிக்கின்றீர்கள் ?**

**என்னை சித்தியடையச் செய்யும், எனது மதிப்பெண்களை அதிகரியும். எனக்கு பனம் கொடுங்கள் என்றா ?**

**நீங்கள் எப்போதாவது என்னை நல்லவனாக மாற்றும், பிறரை மகிழ்ச்சியோடு வைத்திருக்கவும், அவர்களுக்கு நன்மை புரியும்படியாக எனக்கு பெலனை தாரும் என்று கேட்டுள்ளீகளா ? இல்லையென்றால், இன்றுமுதல் அவற்றை தருமம்படியாக வேண்டுதல; செய்யவும்.**



தரம் 8 - பாடம் 17

# மெய்யான திராட்சைச்செடி




## திருமறைப் பகுதி – பரி. யோவான் 15:1-17

**மனன வசனம் :-** “இவ்வாறே உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்.”

**பரி. மத்தேயு 5:16**

**புதிரை éர்த்திச் செய்யவும் (பதிலை வட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கவும்.)**




- நெருப்பில்
- இயேசு
- கழித்து
- நண்பர்கள்
- கடவுள்
- Àய்மை
- அன்பு

**<u>மேலிருந்து கீழ்</u>**

1. தோட்டச் சொந்தக்காரர் இவரே.
2. கனி தரும் அனைத்துக் கொடிகளையும் மிகுந்த கனி தருமாறு …… விடுவார்.
3. நாம் கனி கொடுப்பதற்கு இயேசுவோடு ………… இருக்க வேண்டும்.
4. என் தந்தையிடமிருந்து நான் கேட்டவை அனைத்தையும் உங்களுக்கு அறிவித்தபடியால் நீங்கள் என் ……… என்றேன்.

**,டமிருந்து வலம்**

5. நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம்…….. கொள்ளுங்கள்.
6. உண்மையான திராட்சைச் செடி யார் ?
7. உலர்ந்த கொடிகளைச் சேர்த்து ……. போடப்பபடும்.
8. இயேசு சொன்ன வார்த்தைகளால் நீங்கள் இப்போது ……….. இருக்கிறீர்கள்.

ஆக்கம் :- இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்வி மன்றம், கொழும்பு மறைமாவட்டம்.

- இயேசுவோடு இணைந்திருப்பதற்கு நீங்கள் என்ன செய்யவேண்டும் ?

- இயேசுவுடனான இருக்கும் நட்பை காத்துக்கொள்ளுவதற்கு நீங்கள் என்ன செய்யவேண்டும் ?

- இத் திருமறைப் பகுதிக்கு அமைய இயேசு நம்மிடம் கேட்கும் வேண்டுகோள் என்ன ? அவ் வேண்டுகோளை நிறைவேற்றுவதற்காக நீங்கள் செய்யக்கூடிய 03 விடயங்களை எழுதவும்.

**இயேசு அன்புக்கொள்வது போல மற்றவர் மீது அன்புக்கொள்ளவும், அவருடைய கற்பித்தல்களுக்கு அமைய செயல்படுவதற்கு பெலனளிக்குமாறு வேண்டுதல் செய்யவும்.**

தரம் 8 - பாடம் 18




# நல்ல ஆயன்

## திருமறைப் பகுதி – பரி. யோவான் 10:1-16

**மனன வசனம் :-** "நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்." **பரி. யோவான் 10:11**

- நல்ல ஆயனைக் குறித்து நீங்கள் அறிந்தவற்றை கீழ்க்காணும் வட்டங்களில் எழுதவும்.



- இயேசு நம்மை செம்மறி ஆடுகளுக்கு ஏன் ஒப்பிட்டார் ?

.........................................................................................................

- செம்மறி ஆடுகள் நல்ல ஆயனை ஏன் நம்புகின்றது ?

.........................................................................................................

- **"இயேசு எனது நல்ல ஆயன்"** என்ற தலைப்பின் கீழ் சிறு கட்டுரையொன்று எழுதவும்.

❖ **இயேசு உங்களுக்கு அருளிய பாதுகாப்பையும் வழிகாட்டலையும் குறித்து நன்றி செலுத்தவும்.**

ஆக்கம் :- இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்வி மன்றம், கொழும்பு மறைமாவட்டம்.

தரம் 8 - பாடம் 19



# கெத்சமனி வேண்டல்

## திருமறைப் பகுதி – பரி. மாற்கு 14: 32-42

**மனன வசனம்** :-"உங்கள் மனம் ஆர்வம் உடையதுதான்É ஆனால் உடல் வலுவற்றது. எனவே சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்" என்றார்.
பரி. மாற்கு 14:38

- இயேசு வேண்டுதல் செய்வதற்கு கெத்சமனி தோட்டத்திற்கு செல்வதற்கான காரணம் என்ன ?

.......................................................................................................................................



- இயேசுவுடன் வேண்டுதல் செய்வதற்கு அத் தோட்டத்திற்கு அவருடன் சென்றவர்கள் யார் ?

.....................................................................................

- இயேசு சிலுவைக்குச் செல்லாமல் அதிலிருந்து தப்பிச் சென்றிருக்கலாம். ஆனால் அவர் "அப்பா, தந்தையே ...... என் விருப்பப்படி அல்லÉ உம் விருப்பப்படியே நிகழட்டும்" என்று கூறி கடவுளின் கட்டளைக்கு ஏன் கீழ்ப்படிந்தார் ?

.......................................................................................................

- இயேசு உங்களிடம் "இன்னும் உறங்கி ஓய்வெடுக்கிறீர்களா ? " என்று கேட்டால் உங்களின் பதில் என்ன ? நீங்கள் விழ்திருந்து உங்களுடைன சோம்பல்தனணத்தை இல்லதொழிக்க என்ன செய்யவேண்டும் ? தெளிவுப்படுத்தவும்.

"........................................................................................................

.........................................................................................................

**உங்களுடைய பெற்றோர் கடினமானதொன்றை செய்யும்படி உங்களுக்கு கூறினால், நீங்கள் அதற்கு கீழ்ப்படிவீர்களா ? பிறருக்காக உங்கள் உயிரை அர்ப்பணிப்பீர்களா ? என்று நீங்கள் உங்களிடமே கேட்டுப்பாருங்கள்.**

- **நீங்கள் வேண்டுதல் செய்கிறிர்களா ? அதற்காக குறிப்பிட்ட நாள் அல்லது நேரமொன்று உங்களுக்கு இருக்கின்றதா ? இல்லையென்றால், வேண்டுதல் செய்வதற்கான கால அட்டவணையொன்றை செய்து அதை சுவரில் ஒட்டிக்கொள்ளவும்.**

- **இயேசு நமக்காக கடினமான தெரிவு ஒன்றை செய்தார். அதற்காக நீங்கள் செய்யமுடியுமானதை செய்யுங்கள்.**
- **இயேசுவைப் போற்றுங்கள். அவருக்காக வாழுங்கள். அவர் எவ்வளவு அருமையானவர் என்பதை பிறருக்கு கூறுங்கள்.**
- **நீங்கள் அவரை நேசிப்பதை ஓவியமாக, கவிதையாக அல்லது பாடலாக வெளிக்காட்டவும்.**

- **இயேசு நமக்காக சிலுவையில் அறையப்பட்டு எமக்கு மீட்பைப் பெற்றுத்தந்தமைக்காகவும், இப்போது நம்மோடு நித்தியகாலமாக உயிரோடு இருப்பதற்காகவும் அவருக்கு நன்றி செலுத்துங்கள்.**

ஆக்கம் :- இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்வி மன்றம், கொழும்பு மறைமாவட்டம்.

## தரம் 08 - பாடம் 20



# எதிர்கால திருச்சபைக்கான பொதுநிலை போதகர்களைத் தயார் படுத்துதல் (செயல்பாட்டு பாடம்)

**மனன வசனம் :-** "நீ கடவுள்முன் ஏற்புடையோனாக நிற்க முழு முயற்சி செய்! உண்மையின் வார்த்தையை நேர்மையாய்ப் பகுத்துக் கூறும் பணியாளாகிய நீ வெட்கமுற வேண்டியதில்லை." **2 தீமொத்தேயு 2:15**

**அறிமுகம்:**

1. "இன்று நான் உனக்குக் கட்டளையிடும் இவ்வார்த்தைகள் உன் உள்ளத்தில் இருக்கட்டும்." இணைச்சட்டம் 6.6ய
2. இயேசு அவர்களை நோக்கி, "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்." - மாற்கு 16:15
3. "அவ்வாறே திருச்சபையிலும் கடவுள் முதலாவது திருத்தூதர்களையும், இரண்டாவது இறைவாக்கினர்களையும், மூன்றாவது போதகர்களையும், பின்னர் வல்லசெயல் செய்வோர்களையும், அதன்பின் பிணி தீர்க்கும் அருள்கொடை பெற்றவர்கள், துணைநிற்பவர்கள், தலைமையேற்று நடத்துபவர்கள், பல்வகை பரவசப்பேச்சு பேசுகிறவர்கள் ஆகியோரையும் ஏற்படுத்தினார்." – 1 கொரிந்தியர் 12:28

- கடவுள் தம்முடைய வார்த்தையை நம் இருதயங்களில் வைத்து மற்றவர்களிடமும் பகிர்ந்து கொள்ளும்படி கேட்கின்றார். கடவுள் இந்த உலகில் தனது பணியைச் செய்வதற்கு மக்களை அருட்பொழிவு செய்கிறார். நீங்கள் அவர்களில் ஒருவர். ஆகவே, அவருடைய ஊழியத்தில் ஈடுபடத் தயாராகுங்கள்.
- இன்று உங்கள் ஓங்வுநாட் பாடசாலை பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்ள ஒரு சிறிய பிரசங்கத்தைத் தயாரிக்க உங்களை அழைக்க விரும்புகிறோம்.
- படிமுறைகளை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- திருமறைப் பகுதியொன்றை, கதை, உவமை அல்லது சம்பவத்தைத் தேர்ந்தெடுக்கவும் (குறுகியதாக இருத்தல் வேண்டும்)
- வேண்டுதல் ஒன்றை செய்து திருமறைப் பகுதியை சில முறை வாசிக்கவும்.
- அதை உங்கள் வார்த்தைகளில் எழுதுங்கள்.
- கண்களை மூடி, அவருடைய செய்தியை உங்களுக்கு வெளிப்படுத்தும்படி கடவுளிடம் வேண்டுதல் செய்யுங்கள்.
- பயன்பாட்டைக் கண்டுபிடிக்க முயற்சிக்கவும்.
- ஒரு தனி காகிதத்தில் எழுதுங்கள்
    - அறிமுகம் ∴வரவேற்பு
    - விளக்கம்
    - செய்தியின் பொருள்
    - பயன்பாடு
    - வேண்டுதல்




அன்புள்ள கடவுளே, உங்கள் உண்மையை வெளிப்படுத்தி,
உங்கள் வழியை எனக்குக் தெளிவுப்படுத்துங்கள் ............

**தரம் 8 - பாடம் 21**



# எல்லோருக்கும் நற்செய்தி

**திருமறைப் பகுதி :- திருத்Àதர் பணிகள் 8:4-25**

**மனன வசனம் :-** “பிள்ளைகளே, நீங்கள் கடவுளைச் சார்ந்தவர்கள். நீங்கள் அந்தப் போலி இறைவாக்கினர்களை வென்றுவிட்டீர்கள்É உங்களுள் இருப்பவர் உலகில் இருக்கும் அந்த எதிர்க் கிறிஸ்துவை விடப் பெரியவர்.”1 **யோவான் 4:4**

- பிலிப்பு சமாரியாவில் இயேசுவின் நாமத்தினால் புரிந்த வந்த அடையாளங்களை எழுதவும்.

…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………

- பிலிப்பு எதனை அறிவித்த போது சமாரியாவின் மக்கள் அவர் மீது நம்பிக்கை கொண்டனர் ?

…………………………………………………………………………………………………

- பேதுருவும் யோவானும் சமாரியாவுக்கு சென்று அங்கே இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களுக்கு Àய ஆவியால் ஆட்கொள்ளப்படுத்தும் படியாக வேண்டுதல் செய்தற்கான காரணம் என்ன ?

…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………

- கடவுளின் கொடைகளை பெற்றுக்கொள்வதற்கு நாம் என்ன செய்யவேண்டும் ?

…………………………………………………………………………………………………..

- கடவுளின் பிள்ளையாக இறைபக்தியுடைய வாழ்வொன்றை வாழ்வதற்கு, நீங்கள் என்ன முயற்சியெடுப்பீர்கள் ?

…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………
……………………………………………………………………………………

- ➢ Àயாவியின் வல்லமை உங்களுக்குள் செயற்படுவதை நீங்கள் உனர்ந்துள்ளீர்களா ?
- ➢ உண்மையற்றதும் போலியானதுமாக வரும் அடையாளங்களால் நீங்கள் ஏமாற்றப்பட்டுள்ளீர்களா ?
- ➢ நற்செய்தியை கேள்விப்படாதவர்களுக்கு அதனை அறிவிப்பதற்கான முயற்சிகளை நீங்கள் எடுக்குள்ளீர்களா ?

❖ சவால்களின் மத்தியில் திடமாக இருப்பதற்கும் Àய ஆவியின் வல்லமை உங்களுக்குள் கிரியைச் செய்யுமபடியாகவும் கடவுளிடம் வேண்டுதல் செய்யுங்கள்.

ஆக்கம் :- இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்வி மன்றம், கொழும்பு மறைமாவட்டம்.





**தரம் 8 - பாடம் 22**

# பேதுருவும் கொர்னேலியும்

**திருமறைப் பகுதி :- திருத்Àதர் பணிகள் 10:1-33**

**மனன வசனம் :-** “அப்போது பேதுரு பேசத் தொடங்கி, ”கடவுள் ஆள் பார்த்துச் செயல்படுவதில்லை என்பதை நான் உண்மையாகவே உணர்கிறேன்.” **திருத்Àதர் பணிகள் 10:34**

- பேதுரு கண்ட காட்சி என்ன? அதனை தெளிவுப்படுத்தவும். (நீங்கள் ஓவியமொன்றையும் வரையலாம்.)

……………………………………………………………………………………

- பேதுரு, தாம் கண்ட காட்சியை மற்றவருக்கு எவ்வாறு தெளிவுப்படுத்தினார் ? அதனை உங்களுடைய வார்த்தைகளால் எழுதவும்.

……………………………………………………………………………………
……………………………………………………………………………………

- இக் காட்சிÀடாக பேதுரு, தம்முடைய எந்த மனப்பாங்கை மாற்றிக்கொண்டார் ?

……………………………………………………………………………………

- கொர்னேலியு என்பவர் எப்படிப்பட்டவராயிருந்தார் ?

……………………………………………………………………………………

- பேதுருவையும் கொர்னேலியுவையும் சந்திக்கச் செய்வதில் கடவுளின் அபிப்ராயம் என்னவாகயிருக்கும் என்று நீங்கள் கருதுகிறீகள் ?

……………………………………………………………………………………

- இத் திருமறைப் பகுதியின் மூலமாக நீங்கள் கற்றுக்கொண்ட பாடம் என்ன ?

……………………………………………………………………………………
…………………………………………………

➢ **—Àய்மையானது எனக் கடவுள் கருதுவதை தீட்டாகக் கருதாதே˜**
  - சிந்தித்துப் பாருங்கள், தற்போது பரவிவரும் தொற்று நோய்களுக்கு பயந்து, நீங்கள் அல்லது உங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் பரிசுத்த நற்கருணையை நிராகரிக்கின்றீர்களா ?
  - பலவித காரணங்களைக் கொண்டு கடவுள் படைத்த மனிதர்களை வேறுப்படுத்தி நடத்துகிறீகளா ?

➢ கடவுள் நமக்கு கட்டளையிட்டது எதுவாகயிருந்தாலும், நாம் அதனை செய்வதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

❖ இயேசுவைப் போன்று ஒவ்வொருவரையும் சமமாக நடத்துவதற்கும் Àய ஆவியானவரின் வழிக்காட்டலைப் பெற்றுத்தரும்படியாகவும் வேண்டுதல் செய்யவும்.





**தரம் 8 - பாடம் 23**

# திருவிவிலிய மொழிபெயர்ப்பு

**மனன வசனம் :-** “இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள்.” **யாக்கோபு 1:22**

## திருவிவிலியம் அறிமுகம்

கடவளுடைய ஏவுதலால் எழுதப்பட்ட திருவிவிலியமானது, உலகின் அனைத்து தேசங்களிலும் வாழும் கிறிஸ்தவர்களின் நம்பிக்கைக்கு அடிப்படையான அதிபுனிதமான Áலாகும். பல பொது தலைப்புக்கள் காணப்படுவதனால், புத்தகக் கோர்வையின் கூட்டான திருவிவிலியத்தை ஒரே Áலாக கருதப்படுகின்றது. கடவுளுக்கும் மனிதனுக்குமிடையெ உள்ள தொடர்பு, இயேசுவுக்குள் **“மீட்பு”**, மனித இனத்திற்கு கடவுளின் வெளிப்பாடு மற்றும் கடவுளுக்கு கிடைக்கும் மனிதனின் பிரதிபலிப்பு ஆகியவற்றை உதாரணமாக குறிப்பிடலாம்.

## திருவிவிலியம் பரிணமம் அடைந்த விதம்

- ஆரம்ப காலத்தில் இறை வார்த்தை எழுத்துமூல ஆவணப்படுத்தலுக்கு முன் பேச்சுவழியாக பரம்பரை பரம்பரையாக வந்தவையாக இருந்தது. அதனை “வாய்வழி பாரம்பரியம்” என அழைப்பர்.
- பிற்காலத்தில் கற்பலகைகள், பதப்படுத்தப்பட்ட விலங்குத்தோல், பெப்பிரஸ் எனும் மர இலைகளைக் கொண்டு அதன் மீது குறிப்புகள் எழுதுவதற்கு பழகினார்கள்.
- தயார் செய்யப்பட்ட சுருள்படிவங்களில் திருவிவிலியத்தை எழுதி, ஆண்டவரின் இல்லத்திலும், êத வழிபாட்டுத் தலங்களில் மாத்திரம் அனைவரது பாவணைக்காக வைக்கப்பட்டிருந்தது.



## திருவிவிலியத்தில் இரண்டு பகுதிகள் அடங்கியுள்ளது.

- **பழைய ஏற்பாடு** மற்றும் **புதிய ஏற்பாடு** என இரண்டு பகுதிகள் திருவிவிலியத்தில் அடங்குகிறது.
- பழைய ஏற்பாட்டின் புத்தகங்கள் 39 ஆகும். அது இயேசுவுக்கு முன்னதாக உள்ளவையாகும். இயேசுவுக்கும் திருத்Àதர்களுக்கும் புனித Áலாக (திருவிவிலியம்) இருந்தது பழைய ஏற்பாடு ஆகும்.
- புதிய ஏற்பாடு இயேசுவுக்கு பின்பு உள்ளவை ஆகும். வழிகாட்டும் கொள்கை நற்செய்திகள் மற்றும் செயற்பாடுகள், திருமுகங்கள் (நிருபங்கள்) உடன் அதில் 27 புத்தகங்கள் அடங்கியுள்ளது.
- ரோமன் கத்தோலிக்கம் மற்றும் ஆர்தொடொக்ஸ் திருச்சபைகள் பயன்படுத்தும் திருவிவிலியத்தில் 73 புத்தகங்கள் அடங்கியுள்ளது. இனைத் திருமுறை Áல்கள் என அழைக்கப்படும் 07 புத்தகங்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளமையே இதற்கு காரணம்..

## திருவிவிலியம் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது

இயேசுவின் மரணத்திற்கு பின் உயிர்த்தெழுதலினால், பிற இனத்தவருக்கு நற்செய்தி பரவத் தொடங்கியதோடு, திருவிவிலியம் பல மொழிகளுக்கு மொழிபெயர்க்கும் பணிகளும் ஆரம்பமாகின. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தமது தாய்மொழி மூலம் திருவிவிலியத்தைக் கற்றுக்கொள்வது மிக முக்கியமாக இருந்தது. இதுவரை முழுத் திருவிவிலியத்தை 264 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும், மொழிபெயர்ப்பின் போது அதன் மூல பிரதிகளின் துல்லியமானத்தன்மையை பாதுகாப்பதற்கு முயற்சியெடுத்துள்ளார்கள் என்பதை காணக்கூடியதாகவுள்ளது.

- ீதர்களின் மொழியான **எபிரேய மொழியில்** பழைய ஏற்பாடு எழுதப்பட்டுள்ளது.
- புத்தகம் எனும் பொருள் கொண்ட **“பிபிலியா”** எனும் கிரேக்க சொல்லிலிருந்து **விவிலியம்** என்ற பதம் உருவானது.
- அக்காலத்தில் பயன்படுத்திய உலக மொழியான **கிரேக்க மொழியினால்** புதிய ஏற்பாடு எழுதப்பட்டுள்ளது. (இவ்விரு மொழிகளும் மத்தியத்தைர உலகில் அதிகமாக பயன்படுத்தியுள்ளனர்.)

**கிரேக்க மொழிக்கு மொழிபெயர்ப்பு**

- **செப்துவாஜின்ட்** - அலெக்ஸான்ட்ரியாவின் டொலமி என்பவர் எருசலேமிலிருந்து 70 எழுத்தாளர்களை வரவழைத்து, எபிரேய மொழியில் எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டை, கிரேக்க மொழிக்கு மொழிபெயர்த்தமையை இவ்வாறு அழைக்கப்படும். “செப்துவா” என்றால் எழுபது என்று பொருளாகும்.



**லத்தின் மொழிக்கு மொழிபெயர்ப்பு**

- **வல்கேட்** - புனித ஜெரொம் அவர்களினால் லத்தின் மொழிக்கு மொழிபெயர்த்தமையை இவ்வாறு அழைக்கப்படும். கி.பி. 450 இல் இது பயன்படுத்தப்பட்டது.

**ஆங்கில மொழிக்கு மொழிபெயர்ப்பு**

- ஜோன் வயிக்லிப் என்ற குருவானவரினால் லத்தின் பிரதியை ஆங்கில மொழிக்கு மொழிபெயர்த்தமையை திருச்சபைத் தலைவர்களின் எதிர்த்தனர். இதன் காரணமாக ஒக்ஸ்பர்ட் மேல் சட்ட சபை, அதனைத் தடைச் செய்தது.
- வில்லியம் டின்டேல் என்ற குருவானவரினால் திருவிவிலியத்தை மீண்டும் ஆங்கில மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்து, 1526 ஆம் ஆண்டில் புதிய ஏற்பாட்டை அச்சிட்டார்.

**ஜெர்மன் மொழிக்கு மொழிபெயர்ப்பு**

- மார்டின் Âத்தர் என்பவர் திருவிவிலியத்தை ஜெர்மன் மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தார்.

- **உங்களுடைய தாய்மொழியில் திருவிவிலியத்தை வாசிக்கக்கிடைத்தமையை நீங்கள் எவ்வாறு உணருகிறீர்கள் ?**
- **திருவிவிலியத்தின் பரிணாமம் தொடர்பாக மேலும் தகவல்களை சேகரித்து சிறு கைÁல் ஒன்றை வடிவமைக்கவும்.**
- **திருவிவிலியத்தை வாசிப்பதனால் உங்கள் வாழ்வில் கற்றுக்கொண்ட பாடங்கள் என்ன ?**

மேற்குறிப்பிடப்பட்ட திருவிவிலியம் தொடர்பான தகவல்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும். நீங்கள் கற்றுக்கொண்டதை மற்றவர்களுடன் பகிர்ந்துக்கொள்ளவும்.

- உங்களுக்கென்று திருவிவிலியமொன்றை வைத்துக்கொள்ளவும். உங்களுக்கு திருவிவிலியம் ஒன்று இல்லாவிட்டால், அதனை கொள்வனவு செய்வதற்கு முயற்சியெடுக்கவும்.
- தினந்தோறும் திருவிவிலியத்தை வாசிக்கவும்.
- நீங்கள் கற்றுக்கொண்ட திருமறைக் கதைகளை குடும்பத்தினர் மற்றும் நண்பர் நண்பிகளுடன் பகிர்ந்துக்கொள்ளவும்.

நமது தாய்மொழியிலே திருவிவிலியத்தை வாசிக்கக் கிடைத்தமைக்கு நன்றி செலுத்துவதோடு அவருடைய இறை வார்த்தையை புரிந்துக்கொள்வதற்கு உதவி செய்யும்படியாக இறை வேண்டல் செய்யவும்.



தரம் 8 - பாடம் 24




# இலங்கையில் திருவிவிலியத்தின் வெவ்வேறு பதிப்புகள்

**மனன வசனம் :-**“இவ்வுலகில் எத்தனையோ வகையான மொழிகள் உள்ளன. அவற்றுள் பொருள் தராத மொழியே இல்லை.”**1 கொரிந்தியர் 14:10**



**அறிமுகம்**

இலங்கையில் மற்றும் உலகில் வெவ்வேறு பதிப்புகளுடனான பல திருவிவிலியங்கள் பயன்படுத்தப்படுகின்றது.
ஆங்கில திருவிவிலியத்தின் 100 இற்கும் அதிகமான பதிப்புகள் உள்ளன. அதிலும் கிரேக்க, அரமெயிக் போன்ற மொழிகளில் எழுதப்பட்ட திருவிவிலியத்தின் பொருள்களை விளக்கிக் கூறுவதற்கு பெரும் சிரமத்தை மேற்கொண்டுள்ளார்கள். அதிலும் சில பதிப்புகள், வாசகருக்கு இலகுவாக விளங்கக்கூடிய முறையில் எளிதாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் எவ்வளவோ பிரிவுகள், திருச்சபைகள், கலாச்சாரங்கள் மற்றும் அமைப்புகள் பரவியிருந்தாலும் அனைத்து கிறிஸ்தவ பக்தர்களும் பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய திருவிவிலியம் ஒன்று உண்டு.




**இலங்கையில் உள்ள திருவிவிலிய பதிப்புகள்**

இலங்கைக்கு கிறிஸ்தவ மதத்தை போர்த்துகேயர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர்களினால் கிறிஸ்தவ மத பரவலுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள்.

- ஆங்கிலம், ஒல்லலாந்தர் மற்றும் போர்த்துகேய மொழிகளுடைய திருவிவிலியங்களை லண்டனிலிருந்து இறக்குமதி செய்தார்கள்.
- பிரித்தானிய இனத்தவரான வில்லியம் டொல்ப்ரே (றுடைடயைஅ வுழடகசநல) என்பவர் ஆங்கில திருவிவிலியத்தை சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்தார்.
- தமிழ் மொழியின் திருவிவிலியங்களை கல்கத்தா திருச்சபையிலிருந்துப் பெற்றுக்கொண்டார்கள்.
- பெப்டிஸ்ட் மற்றும் மெதடிஸ்ட் மி'னாரிகள் இலங்கைக்கு வரும்வரை, சிங்கள மொழியில் திருவிவிலியங்கள் இருக்கவில்லை. அவர்கள் தமது உரைகள் மற்றும் சமய இலக்கிய கட்டுரைகளுக்கு சிங்கள மொழியைப் பயன்படுத்தினார்கள்.
- கத்தோலிக்க பேராயர் சபையின் அனுமதியோடு 1982 ஆம் ஆண்டில் சிங்கள மொழியிலான திருவிவிலியத்தை வெளியிடப்பட்டது. புதிய திருத்தங்களுடனான சிங்கள மொழி திருவிவிலியத்தின் மூன்றாம் பதிப்பு 2006 இல் வெளியிடப்பட்டது.
- இலங்கையில் தற்போது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் எனும் மும்மொழியிலான திருவிவிலிய பதிப்புகளை பயன்படுத்தப்படுகின்றது.

- நீங்கள், உங்கள் குடும்பத்தினரோடு திருவிவிலியத்தை வாசித்து குடும்ப இறைவேண்டல் நேரத்தில் ஈடுபடுகின்றீர்களா ? அவ்வாறு இல்லையெனின், இன்றே அதனை ஆரம்பியுங்கள்.
- நீங்கள் உங்கள் நண்பர் நண்பிகளுக்கு, திருவிவிலியத்தைக் குறித்து எவ்வாறு கற்றுக்கொடுப்பீர்கள் ?
- திருவிவிலியம் தொடர்பான கட்டுரைகளை சேகரித்து வைதத்துக்கொள்ளவும்.



## தரம் 8 - பாடம் 25



# எசேக்கியா அரசர்

**திருமறைப் பகுதி :- 2 குறிப்பேடு 29:1-19**

**மனன வசனம் :-** “மிகச் சிறியவற்றில் நம்பத் தகுந்தவர் பெரியவற்றிலும் நம்பத் தகுந்தவராய் இருப்பார். மிகச் சிறியவற்றில் நேர்மையற்றவர் பெரியவற்றிலும் நேர்மையற்றவராய் இருப்பார்.” **பரி. Âக்கா 16:10**

**சரியான பதிலை தேர்ந்தெடுக்கவும்.**

1. எசேக்கியா அரசரான போது அவரின் வயது ?
   - I. 20 வயது
   - III. 25 வயது
   - II. 29 வயது
   - IV. 22 வயது

2. எசேக்கியாவின் நேரிக்கு சமனான அரசர்
   - I. சவுல்
   - II. தாவீது
   - III. சாலமோன்
   - IV. எரொபவாம்

3. எசேக்கியா ஆண்டவரின் இல்லக் கதவுகளைத் திறந்து, அவற்றைப் பழுதுபார்க்கும் பணிகளை ஆரம்பித்தது,
   - I. அவர் அரசரான முதல் நாள்
   - II. அவருடைய மரணத்திற்கு முதல் மாதத்தில்
   - III. அவருடைய ஆட்சியின் முதல் ஆண்டின் முதல் மாதத்தில்
   - IV. அவர் அரசராகவிருந்த ஆண்டிற்கு முன் ஆண்டில்



4. ஆண்டவருடைய இல்லத்தை Àய்மைப்படுத்துவதற்கு எசேக்கியா அரசர் இவர்களை ஒன்றுகூட்டினார்.
   - I. படைவீரர்களையும் இளவரசர்களையும்
   - II. குருக்களையும் லேவியரையும்
   - III. குருக்களையும் படைவீரர்களையும்
   - IV. லேவியரையும் இளவரசர்களையும்

- எசேகக்கியா ஓர் அரசராக கடவுளுக்காக புரிந்த முதல் பணி என்ன ?

  ..............................................................................................................

- எசேக்கியா அரசரின் கூற்றின்படி திருத்தலத்தின் தீட்டை அகற்ற முன் எதனை செய்யவேண்டும் ?

  ..............................................................................................................

- எசேக்கியா அரசரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய தலைமைத்துவ பண்பு என்ன ?

  ..............................................................................................................

- குழுவொன்றின் பொறுப்பை ஏற்கும் பொழுதும் பொறுப்புக்களை வழங்கும் போதும் நீங்கள் எவ்வாறு செயற்படுவீர்கள் ?

  ..............................................................................................................

❖ **உங்கள் வாழ்வில் கடவுள் அருளிய அனைத்து பெலன்களைக் குறித்து நன்றி செலுத்துவதோடு, கடவுளின் பிள்ளையாக, தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் தலைமைத்துவ பண்புகளை வெளிக்காட்டுவதற்கான திறனை தந்தருளும்படியாக வேண்டுதல் செய்யவும்.**

ஆக்கம் :- இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்வி மன்றம், கொழும்பு மறைமாவட்டம்.

தரம் 8 - பாடம் 26



# நெகேமியா

**திருமறைப் பகுதி :- நெகேமியா 1:1-11, 5:11-19**

> **மனன வசனம் :-** “ஏனெனில் மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாக தம் உயிரை கொடுப்பதற்கும் வந்தார்.”**பரி. மாற்கு 10:45**

- நெகேமியா ஆண்டவருக்கு செய்த இறை வேண்டுதலின் முக்கியமான பண்புகளை வரிசைப்படுத்தி எழுதவும். (நெகேமியா 1:5-11) உதாரணம் :- ஆண்டவரைப் போற்றுதல்.

  ………………………………………………………………………………………
  ………………………………………………………………………………………
  ………………………………………………………………………………………

- நெகேமியாவின் வாழ்வில் காணப்படும் தலைமைத்துவ பண்புகள் எவை ?

  ………………………………………………………………………………………
  ………………………………………………………………………………………

- நெகேமியா, ஆண்டவருக்காக தமது வாழ்வை எவ்வாறு ஈடுபடுத்தினார் ?

  ………………………………………………………………………………………
  ………………………………………………………………………………………

- அவர் தமது அதிகாரங்களை தவறாக பயன்படுத்தவில்லை என்பதற்கான உதாரணத்தை எழுதுக.


  ………………………………………………………………………………………
  ………………………………………………………………………………………

- நெகேமியாவின் வாழ்விலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட பாடம் என்ன ?

  ………………………………………………………………………………………
  ………………………………………………………………………………………

> - நீங்கள் தலைவரானால், பணி புரிவதற்கு சலுகைகளை எதிர்ப்பார்பீர்களா ?
> - நெகேமியா தமது நம்பிக்கை நிமித்தம் அனைத்துத் தடைகளையும் தகர்த்தெறிந்த விதத்தை அவருடைய கதையை வாசிக்கும் போது நீங்கள் கற்றிருப்பீர்கள். உங்களுக்கு இயலுமானால் அவருடைய முழுக்கதையையும் வாசிப்பதற்கு நேரத்தை ஒதுக்கிக் கொள்ளவும். அவர் ஆண்டவரைக் கொண்டு பெலனடைந்தவராக அச்சமின்றி சவால்களை வெற்றிக்கொண்ட விதத்தையும் அவருடைய தாழ்மைக்குணத்தையும் குறித்து நீங்கள் கற்றுக்கொள்ள முடியும்.

> **தமது பணியியை, சலுகைகளுக்காக அல்ல அதனை ஒரு கடமையாகவும் பொறுப்பாகவும் கருதி நிறைவேற்றுவதற்கான திறனை அளிக்குமாறு இறை வேண்டுதல் செய்யவும்.**



தரம் 8 - பாடம் 27

# சவுல் என்கிற பவுல்

திருமறைப் பகுதி :- திருத்Àதர் பணிகள் 8:1-3, 9:1-25, 13:9, 26:4-16,
பிலிப்பியர் 3:4-7

**மனன வசனம் :-** “நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லைÉ நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன். ஆகவே நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார்.”

**பரி. யோவான் 15:16**

**அடைப்புக்குள் உள்ள பதில்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

(ஓர் ஒளி, நகருக்குள், தலைமைக் குருவிடம், சவுலே, தரையில், அனனியாவிடம், திருத்Àதர்களை, மூன்று நாள், துன்புறுத்துகிறாய், வீசியது, எருசலேமுக்கு, பார்வை, இயேசு, தமஸ்குவின், தர்சு, ஆண்டவரே, கடிதங்களைக், உண்ணாமல் குடிக்காமல்.)

- சவுல் ............................. சென்று ஆண்டவரின் ................................ பிடித்து ........................... கொண்டுவரும்படி ........................... தொழுகைக் கூடங்களுக்கு சமர்ப்பிக்கும்படி ..................... கேட்டு வாங்கினார்.
- அவர் தமஸ்குவை நெருங்கிய போது திடீரென வானத்திருந்து ............... அவரை சூழ்ந்து ............. அவர் ............... விழுந்தார். அப்போது ............ சவுலே, ஏன் என்னைத் ............................ என்று தம்மோடு பேசும் குரலொன்றை கேட்டார்.



- ........................... நீர் யார் ? எனக்கேட்டார். ஆண்டவர் நீர் துன்புறுத்தும் ................ நானே. நீ எழுந்து ...................... செல், நீ என்ன செய்யவேண்டும் என்பது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்.
- சவுல் ................................................ பார்வையின்றி ...................... இருந்தார்.

ஆக்கம் :- இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்வி மன்றம், கொழும்பு மறைமாவட்டம்.

- ஆண்டவர் ................................ பேசி ................ நகரத்தவரான சவுலிடம் சென்று அவருக்கு .................. கிடைக்கும்படி அவர்மீது கைகளை வைக்குமாறு கூறினார்.

➢ **பவுலின் வாழ்வில், இயேசுவைச் சந்திப்பதற்கு முன் மற்றும் சந்தித்தற்கு பின் அவரில் காணப்பட்ட குணாதிசயங்களைக் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடவும்.**

| பவுல், இயேசுவை சந்திப்பதற்கு முன் | பவுல், இயேசுவை சந்தித்தற்கு பின் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

❖ இயேசுவைப் பற்றி இன்னும் அதிகமாக அறிந்துக்கொள்ளவும், பிறருக்கு அவரைப் பற்றி நன்றாக தெளிவுப்படுத்துவதற்குத் தேவையான திறனை அளிக்குமாறு இறை வேண்டுதல் செய்யவும்.



## தரம் 8 - பாடம் 28

# மார்டின் லுத்தர்



**மனன வசனம் :-** “ஆண்டவரின் பேரன்பைப்பற்றி நான் என்றும் பாடுவேன்É நீர் உண்மையுள்ளவர் எனத் தலைமுறைதோறும் என் நாவால் அறிவிப்பேன்.” **திருப்பாடல்கள் 89:1**

### அறிமுகம்

1483ம் ஆண்டு சாக்ஸஸ் பிரதேசத்தில் பிறந்த மார்டின் Âத்தர், ஓர் சுரங்கப் பணியாளரின் மகனாவார். பல இன்னல்கள் துன்பங்களுக்கு மத்தியிலும் கூட அவர் நன்றாக கல்வி கற்றார். எர்பன்ட் பல்கலைகழகத்திற்கு சேர்ந்து, 1505ம் ஆண்டு பட்டப்பின் படிப்பைப் பெற்றுக்கொண்டார். அங்கு அவர் மெய்யியல் (தத்துவ சாஸ்திரம்) கற்றார். சட்டக்கல்வியை கற்பதற்கான சந்தர்ப்பங்கள் இருந்தும், எர்பன்ட் சந்நியாச மடத்தில் சிறிது காலம் தங்கியிருந்த பின் அகோஸ்தியன் பிரிவுக்குட்பட்ட குருவானவராக திடீரென துறவியானார். 1507ல் விட்டென்பர்க் என்னும் இடத்தில் ஆன்மீக உரைகளை ஆரம்பித்தார். 1512ல் இறையியல் தொடர்பான கலாநிதி பட்டத்தை பெற்ற இவர், விட்டென்பர்க் பல்கலைகழகத்தின் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். 1515ம் ஆண்டில், 11 அகோஸ்தியன் சந்நியாச மடங்களின் தலைவராக நியமித்து, அதன் நிர்வாகப் பொறுப்புகளை இவருக்கு கையளிக்கப்பட்டது.

ந்‘டஈடு தொகையொன்று செலுத்துவதன் மூலம் பாவத்திலிருந்து விடுபடலாம் எனும் சந்தர்ப்பமொன்றை உரோம திருச்சபையினால் செல்வந்தர்களுக்கு வழங்கப்பட்டது. பாப்பரசரின் கையொப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட இந்த ஆவணத்திற்கு ஷதண்டமற்றவருடம்’ என்று பெயரிடப்பட்டிருந்தது. மார்டின் Âத்தர், அதற்கு எதிராக 95 வாதங்கள் அடங்கிய ஆவணமொன்றை தமது பல்கலைக்கழக தேவாலயத்தின் வாசற்கதவில் பொருத்தினார். கத்தோலிக்க திருச்சபையை விமர்சித்ததினால், பலர் இவருடன் ஒன்றுசேர்ந்தனர். இவர்களுடைய ஒத்துழைப்புடன், மார்டின் Âத்தர் அவர்கள், தமது கற்பித்தல்கள் தொடர்பான மூன்று Áல்களை வெளியிட்டார். 1520ல் அதற்கு பிரதியுத்தரமாக பாப்பரசர் அவர்கள் அனைத்து ஆவணங்களையும் அழித்துவிடும்படியாகவும், ஷதண்டமற்றவருடம்’ என்பதற்கு எதிராக முன்வைக்கப்பட்ட வாதங்களிலிருந்து 41 வாதங்களை நிராகரிப்பதாகவும் என்று உத்தரவிட்டார். அவர் இதைச் செய்யாத காரணத்தினால் திருச்சபையிலிருந்து விலக நேரிட்டது. ஜெர்மனியின் சமய மறுசீரமைப்பிற்கு காரணமாக இருந்தவர் இவரே. இவருடைய தேவை, திருச்சபையினுள் திருத்தங்களே தவிர, சமய புரட்சி அல்ல.

கிறிஸ்தவ மத கற்றல்கள், திருவிவிலியத்தின் கற்பித்தல்களை அடிப்படையாகக் கொண்டு ஸ்தாபிக்க வேண்டும் என்பதை Âத்தர் அவர்கள் கற்பித்தார். அவர் ஜெர்மன் மக்களுக்கு அவர்களுடைய மொழியிலே வாசிக்கும்படியாக, திருவிவிலியத்தின் 1ம் பதிப்பை தயார் செய்தார். அத்தோடு மக்கள் பேச்சுவழக்கில் நன்கு பரீட்சயமான மொழிநடையில் எழுதப்பட்ட மிகவும் பிரபல்யம் அடைந்த பல பாடல்களையும் வழங்கியுள்ளார்.

**லுத்தர் அவர்களின் பிரதான கற்பித்தல்கள்**

- கிறிஸ்து மீது வைக்கும் நம்பிக்கையினாலேயன்றி, கிறிஸ்தவர்களுக்கு வேறே மீட்பு இல்லை என்பது.
- இயேசு கிறிஸ்துவினால் அனுமதிக்கப்பட்ட சாக்கிரமந்துகளான திருமுழுக்கு மற்றும் பரிசுத்த நற்கருணைக்கு மாத்திரம் முதலிடம் கொடுக்கவேண்டும் என்பது.
- கிறிஸ்தவ சாசனம், அனைத்து விசுவாசிகளின் பங்களிப்பு என்று ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பது.
- அனைவருக்கும் பணி புரியும் உரிமையைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதையும், இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறெவருக்கும் அடிபணிய அவசியமில்லை என்பது.

- மார்டின் Âத்தரின் வாழ்விலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட பாடம் என்ன ?

………………………………………………………………………………………
………………………………………………………………………………………

- திருச்சபையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்குவதற்கான சந்தர்ப்பமொன்று உங்களுக்குக் கிடைத்தால், நீங்கள் அதனை எவ்வாறு நிறைவேற்றுவிர்கள் ?

………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………

- திருச்சபை வளர்ச்சிக்காக பங்களிப்பு வழங்கிய தலைவர்கள் குறித்து தகவல்களை சேகரித்து சிறு கைÁலொன்றை வடிவமைக்கவும்.

> - நமது கிறிஸ்தவ நம்பிக்கையானது, கிறிஸ்துவின் மீதான நம்பிக்கையுடன் கட்டியெழுப்ப வேண்டும்.
> - ஆண்டவர் நமக்கு அளித்த தாலந்துகளை இறைப்புகழுக்காகவும் இறை மகிமைக்காகவும் மாத்திரம் அர்ப்பணிக்க வேண்டும்.
> - எதிர்காலத்தில் திருவிவிலியம் தொடர்பாக மென்மேலும் ஆராய்ந்து அது தொடர்பாக Áல்களை அல்லது ஆவணங்களை எழுதுவதற்கு முயற்சி எடுக்கவும்.

- **உங்களுடைய திறமைகளிÇடாக இறை அரசுக்காக பணி புரிவதற்கு தன்னை, தகுதியுள்ளவனாக மாற்றும் படியாக இறை வேண்டுதல் செய்யுங்கள்.**






**தரம் 8 - பாடம் 29**

# இலங்கை வேதாகமச் சங்கம்

## அறிமுகம்

திருவிவிலியமொன்றை தேடிக்கொள்வதெ மிக கடினமான காலம் ஒன்று இருந்தது. திருவிவிலியத்தின் மதிப்பும் சொல்லி மிகையாகாது. முதலாவது வேதாகமச் சங்கத்திற்கான அடித்தளம், பிரித்தானியாவின் வேல்ஸ் பிரதேசத்தில் 1784[ம்] ஆண்டு பிறந்த மேரி ஜோன்ஸ் எனும் 9 வயது சிறுமியினாலே இடப்பட்டது. மேரிக்கு தனக்கென ஒரு திருவிவிலியமொன்றை சொந்தமாக்கிக்கொள்வதற்கு ஆசை ஏற்பட்டது. ஆனாலும் திருவிவிலியம் மிகவும் அதிக விலையாக இருந்தபடியினால், வறுமையில் வாடிய மேரிக்கு அதற்காக மிகவும் கடினமாக உழைக்க வேண்டியதாக இருந்தது. (விறகுகள் சேர்த்து விற்பனைச் செய்தல், முட்டை விற்பனைச் செய்தல், வீடுகளில் வேலை செய்தல்) மேரிக்கு இப் பணத்தை சேகரிப்பதற்கு 6 வருடங்கள் ஆனது. இச் செயலை அறிந்த தோமஸ் சார்ள்ஸ் என்பவர் ஒவ்வொருவருக்கும் தமது தாய்மொழியில் திருவிவிலியத்தை வழங்க நடவடிக்கை எடுத்தார். அதன் பலனாக, **பிரித்தானிய மற்றும் வெளிநாட்டு வேதாகமச் சங்கம் (டீசவைளைா ரூ குழசநபைபெ டீடைடந ளுழஉநைவல)** அமைக்கப்பட்டது.



1812[ல்] அதன் கிளையொன்றை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது. 1944[ல்] **இலங்கை மற்றும் இந்திய வேதாகமச் சங்கம் (டீடைடந ளுழஉநைவல ழக ஐனெயை ரூ ஊநலடழஉ)** அமைக்கப்பட்டது. 1965[ல்] **இலங்கை வேதாகமச் சங்கம் (ஊநலடழஉ டீடைடந ளுழஉநைவல)** சுயாதீன நிறுவனமாக மாற்றமடைந்தது. இலங்கையினுள் வேதாகமச் சங்கத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 200 வருடங்கள் கடந்துள்ளது.

இலங்கையின் கிறிஸ்தவ மக்களுக்காக திருவிவிலியத்தை மொழிபெயர்ப்புச் செய்து, அச்சிடும் பணிகளை மேற்கொள்ளும் இலங்கை வேதாகமச் சங்கமானது, இலங்கையின் கலாச்சாரம் மற்றும் மக்களின் மொழிநடையை பயன்படுத்தி, திருவிவிலியத்தின் புதிய பதிப்பை 1982[ல்] வெளியிட்டார்கள். அதன் மறுசீரமைத்த பிரதியை 2006[ல்] வெளியிடப்பட்டது. திருச்சபை வேற்றுமைகள் மற்றும் பிரிவுகளின் வேற்றுமைகள் இல்லாமல், அனைத்து கிறிஸ்தவ மக்கள் ஒன்றிணைந்து பொதுவான புதிய பதிப்பை வெளியிட்டமை, திருச்சபைகளுக்கிடையே உள்ள பரஸ்பர ஐக்கியத்தை வெளிப்படுத்துகிறது.

**இலங்கை வேதாகமச் சங்கத்தின் பிரதான நோக்கங்கள் :-**

- இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் இறை வார்த்தையை பரவச் செய்தல்.
- திருவிவிலிய மொழிபெயர்ப்புகள், வெளியிடுதல் மற்றும் பகிர்ந்தளித்தல்.
- திருவிவிலியத்தை வாழ்வோடு தொடர்புப்படுத்துவதற்கு உதவிப் புரிதல்.

**இலங்கை வேதாகமச் சங்கத்தின் இலக்கு :-**

ஒவ்வொரு கிறிஸ்தவ வீட்டிற்கும் திருவிவிலியம் ஒன்று, புதிய ஏற்பாடு ஒன்று அல்லது திருவிவிலியப் பகுதி ஒன்றை வழங்க நடவடிக்கையெடுத்தல்.

- ➢ நீங்கள், இலங்கை வேதாகமச் சங்கத்தின் இலக்கை ஏ்த்திச் செய்வதற்கு எவ்வாறு பங்களிப்பு
- ➢ வழங்குவீர்கள் ?

- உங்களுக்கு இன்று, மலிவு விலைக்கு திருவிவிலியமொன்றை இலங்கை வேதாகமச் சங்கத்திடோகக் கொள்வனவு செய்யலாம்.

- மேரி ஜோன்ஸ் போன்று திருவிவிலியமொன்றினை தனக்கென பெற விரும்பும் பிள்ளைகளுக்கு திருவிவிலியங்களை அன்பளிப்பு செய்ய நீங்கள் பங்களிப்பு வழங்க ஆவலாய் உள்ளீர்களா ?

**உலக மக்களுக்கு இறை வார்த்தையை பரவச் செய்வதற்கு பங்களிப்பு வழங்கும் இலங்கை வேதாகமச் சங்கம் போன்ற பல நிறுவனங்களுக்கு தந்தருளிய கருணைக்காக நன்றி செலுத்துவதோடு அவர்களின் நோக்கங்களை வெற்றிபெறச் செய்வதற்கு வழிக்காட்டலைப் பெற்றுத்தருமாறு இறை வேண்டுதல் செய்யவும்.**

இலங்கை வேதாகமச் சங்கம
293, காலி சாலை, கொழும்பு 03.
தொடர்பு எண் 0112565583/0112575180
மின்னஞ்சல் முகவரி: info@ceylonbibles Society.org

ஆக்கம் :- இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்வி மன்றம், கொழும்பு மறைமாவட்டம்.



**தரம் 8 - பாடம் 30**



# நோக்கங்களை ஊக்குவிக்கும் பாடம்

# சமூக நலன்புரிச் சேவையின் விழுமியம்

**மனன வசனம் :-** **“நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ள வேண்டும். கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்!”**

**பிலிப்பியர் 2:4-5**

**நோக்கம் :-**

- சிறு வயது முதல் திருச்சபை ஊடாக சமூகத்திற்கு சேவையொன்று புரியவேண்டும் என்பதை புரிந்துக்கொள்ளல் வேண்டும்.
- சிறுவர்களாக சமூகத்துடன் தொடர்புகளை எற்படுத்திக்கொள்வதன் அவசியத்தை புரிந்துக்கொள்வதை சாத்தியமாக்குதல்.
- பிள்ளைப் பருவம் முதல் சமூகம் குறித்தான ஓர் உணர்வையும் ஆவலையும் விருத்தியடைச் செய்தல்.
- தேவைகள் உள்ள நபர்களுக்கு உதவிகளை வழங்குவதன் முக்கியத்துவத்தை கற்றுக்கொள்ளல்.
- தமது ஓய்வுநேரத்தை நற்பணிக்காக அர்ப்பணிப்பதன் முக்கியத்துவத்தை கற்றுக்கொள்ளல்.

➢ **உங்களுக்கு இலகுவாக செய்யக்கூடிய சமூக நலன்புரி சேவைகள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.**

- செடி நடுகை மற்றும் அவற்றை பாதுகாத்தல்.
- நீங்கள் நன்கு அறிந்த, தனியாக வாழும் முதியோருடன் நிதமும் பேசுங்கள். அவர்களுக்கு கேட்கும்படியாக திருவிவிலியத்தை வாசியுங்கள். அவர்களுக்கு செவிமடுங்கள்.

➢ **உங்கள் நண்பர் நண்பிகளுடன் சேர்ந்து செய்யக்கூடிய குழச்செயற்பாடுகள்**

- தேவாலயத்தின் தோட்டத்தை அல்லது பொது இடமொன்றின் குப்பைகளை அகற்றி சுத்தம் செய்தல்.
- வைத்தியசாலையொன்றின் சிறுவர் பிரிவுக்கு.·.சிறுவர் இல்லமொன்றிற்கு சென்று சுகயீனமாக இருக்கும் சிறுவர்களுடன் சிறிது நேரம் செலவிடுதல்.
- முதியோர் இல்லமொன்றிற்குச் சென்று அவர்களுக்கு உதவிப் புரிதல்.



- பிறருக்கு சேவை செய்வது, மகிழ்ச்சியின் ஓர் அங்கம் என்பதை கற்றுக்கொள்ளுங்கள்.
- மிகவும் கடினமான சந்தர்ப்பங்களில் ஒருவருக்கொருவர் உதவுவதன் முக்கியத்துவத்தை புரிந்துக்கொள்ளுங்கள்.
- நீங்கள் இறுதியாக ஒருவருக்குப் புரிந்த சேவையை குறித்து சிந்தித்துப் பாருங்கள். அதை செய்யும் போது உங்களுக்கு ஏற்பட்ட உணர்வு என்ன ?

❖ உங்களால் முடிந்த சமூக நலன்புரி சேவைகள் பட்டியலொன்றை தயார் செய்யவும்.

**சமூகச் சேவைகளில் ஈடுபடும் நபர்களுக்காக மற்றும் மென்மேலும் சமூக நலன்புரிச் சேவைகளுக்கு பங்களிப்பு வழங்க தேவையான திறனை பெற்றுத்தரும்படியாக இறை வேண்டுதல் செய்யவும்.**

ஆக்கம் :- இலங்கைத் திருச்சபை கிறிஸ்தவ கல்வி மன்றம், கொழும்பு மறைமாவட்டம்.